உ



# அருள்மிகு ஸ்ரீ வித்யாபாலசந்த்ரகணபதி ஆலய
# புனருத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக பத்திரிக்கை

**விநாயகர் துதி**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடிப் போற்றுகின்றேனே

பேரன்புடைய பக்த கோடிகளே!

இந்த பூலோகத்தில் எங்கும் வீற்றிருக்கக் கூடிய முழுமுதற் கடவுளாகவும், நமது சங்கடங்களை எல்லாம் போக்கி நமக்கு வேண்டியவற்றை நாம் வேண்டிய வண்ணம் அள்ளித் தரக்கூடிய சென்னை மாநகரம், மயிலாப்பூர், சாவித்ரி அம்மாள் ஓரியண்டல் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ வித்யா பாலசந்த்ரகணபதி ஆலய கும்பாபிஷேகமானது,

நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ பராபவ வருஷம் வைகாசி மாதம் 4ஆம் தேதி, [18.05.2026] திங்கட்கிழமை, த்விதீயை, ரோகிணீ நக்ஷத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9 மணிக்கு மேல் 10:30 மணிக்குள் கடக லக்னத்தில்

**புனருத்தாரண மஹாகும்பாபிஷேகம்**

பின்வரும் நிகழ்ச்சிநிரலின்படி நடைபெற இறையருள் கூடியுள்ளதால் பக்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீவித்யாபாலசந்த்ரகணபதியின் பரிபூரண அருளைப் பெற்று நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், நீண்ட ஆயுளோடும் வாழ்வாங்கு வாழ வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**இவண்,**

சாவித்ரி அம்மாள் ஓரியண்டல்
பள்ளி நிர்வாகிகள்,
மயிலாப்பூர், சென்னை-4

ஸ்ரீ. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்
சமஸ்கிருத கல்வி அறக்கட்டளை
நிர்வாகிகள், சென்னை - 4

ஆலய அர்ச்சகர் : சிவஸ்ரீ. K.S. குசலவபுரீஸ்வர குருக்கள்

## நிகழ்ச்சிநிரல்

| நாள் / கிழமை | நிகழ்ச்சிகள் |
|---|---|
| வைகாசி மாதம்<br>2ஆம் தேதி<br>16.05.2026<br>**சனிக்கிழமை**<br>**மாலை 5.00 மணி** | மங்களவாத்தியம், விக்னேஸ்வர பூஜை, புண்யாஹவாசனம், தேவதா அனுக்ஞை, எஜமானர் ஸங்கல்பம், வாஸ்துசாந்தி, ப்ரவேசபலி, ம்ருத்ஸங்கிரஹணம், அருட்ப்ரசாதம், அன்னப்ரசாதம். |
| வைகாசி மாதம்<br>3ஆம் தேதி<br>17.05.2026<br>**ஞாயிற்றுக்கிழமை**<br>**காலை 8.00 மணி** | மங்களவாத்தியம், கோ பூஜை, விக்னேஸ்வர பூஜை, புண்யாஹவாசனம், கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம், லக்ஷ்மீ ஹோமம், விமான கலச ஸ்தாபனம், |
| **காலை 11.00 - 12.00 மணிக்குள்** | **குரு ஹோரையில் ஸ்ரீ வித்யாபாலசந்த்ரகணபதி மூலவர் யந்த்ர ஸ்தாபனம், பிம்ப பிரதிஷ்டை, அஷ்டபந்தன மருந்து சாத்துதல்,** யாகசாலை நிர்மாணம், பூர்ணாஹுதி, தீபாராதனை, அருட்ப்ரசாதம், அன்னப்ரசாதம். |
| மாலை 4.00 மணி | மங்கள வாத்தியம், விக்னேஸ்வர பூஜை, புண்யாஹவாசனம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்ப அலங்காரம், கலாகர்ஷணம், யாகசாலை ப்ரவேசம், **முதல் கால யாகபூஜை,** விசேஷ த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை, அருட்ப்ரசாதம், அன்னப்ரசாதம். |
| வைகாசி மாதம்<br>4ஆம் தேதி<br>18.05.2026<br>**திங்கட்கிழமை**<br>**காலை 6.30 மணி** | மங்கள வாத்தியம், **இரண்டாம் கால யாக பூஜை, நாடீ சந்தானம்,** தத்வார்ச்சனை, ஸ்பர்ஷாஹுதி, விசேஷ த்ரவ்யாஹுதி, **பட்டு வஸ்திரம் ஸமர்ப்பணம்,** பூர்ணாஹுதி, யாத்ரா தான ஸங்கல்பம், தீபாராதனை, கலசபுறப்பாடு, |
| **காலை 10.00 மணி** | **விமான கும்பாபிஷேகம்.** |
| **காலை 10.15 மணி** | **அருள்மிகு ஸ்ரீ வித்யாபாலசந்த்ரகணபதி மூலவர் மஹா கும்பாபிஷேகம்,** அலங்காரம், மஹா தீபாராதனை, அருட்ப்ரசாதம், அன்னப்ரசாதம். |

**19.05.2026 செவ்வாய்க்கிழமை முதல் 05.07.2026 ஞாயிற்றுக்கிழமை வரை**
**48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.**